முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 14.11.2025

O.S No. 190/2023

வா.சா.1 ஜோசப் அருள்ராஜ்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்குச் சொத்திற்கு ரத வீதியிலிருந்து வடக்கிலிருந்து தெற்குபோகும் பாதை வழியாக செல்வேன். அதில் வடக்கிலிருந்து தெற்கே வந்து மேற்காக திரும்பி செல்லவேண்டும் என்றால் சரி. வடக்கிருந்து தெற்கே ஒரு பாதையும் கிழக்கிலிருந்து மேற்கே 2 வது பாதையும் எத்தனை அடி பாதை என்றால் இரண்டுமே 6 அடி அகல பாதையாகும் மேற்படி 6 அடி பாதைகள் பல வருடங்களாக புழக்கத்தில் உள்ளது என்றால் சரி. எனக்கு தெரிய 40 வருடங்கள் பாதையாக உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் வடக்கிலிருந்து தெற்கு வந்து மேற்காக திரும்பும் பாதையின் ஆரம்பத்தில் ஒரு கேட் அமைத்து பூட்டு போட்டுள்ளேன் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ 1 (4 எண்ணம்)ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் 2 வது புகைப்படம் கிழமேல் பாதை உள்பக்க அமைப்பு என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டப்படும் 3 வது புகைப்படத்தில் காலோபிளாக் ஆனது மேற்கு அற்றத்தில் வைத்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரி. அது யார் கட்டினார் என்றால் நான் கட்டினேன்.

2 வது கிழமேல் பாதைக்கு எந்த திசையில் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் வடக்கே உள்ளது. பிரதிவாதியின் வீட்டிற்கு பின் பக்கம் தெற்கு பார்த்து வாசல் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் 4 வது புகைப்படம் என்னிடம் வீட்டை காண்பிக்கும் புகைப்படம் என்றாலும் என்னுடைய வீட்டின் சன்சைடுகள் அனைத்தும் அந்த 6 அடி பாதையின் மேல் உள்ளது என்றால் சரி. வழக்குச் சொத்து விவரத்தில் 4 பக்க எல்லைகளில் கிழமேல் பாதையும், தென்மடல் பாதை எதுவும் குறிப்பிடப்படவில்லை

என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தாக தென்வடல் மற்றும் கிழமேல் பாதைகளை காண்பித்துள்ளேன் என்றால் சரி. வழக்கு பட்டிகைச் சொத்தில் உள்ள எல்லா ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆட்சேபனைகள் இல்லை என்றால் சரியல்ல. கிழமேல் பாதை எனக்கு தனிப்பட்ட பாதையாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி 2 பாதைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முந்தைய வழக்கான அசல் வழக்கு எண் 222/2015 என்ற வழக்கு முடிந்த உடன் கிழமேல் பாதையில் உள்ள கேட்டை அமைத்தேன் என்றாலும் காலோபிளாக் அமைத்து பாதையில் ஏற்படுத்தினேன் என்றாலும் சரிதான்.

அசல் வழக்கு எண். 222/2015 நான் பிரதிவாதி மீது தாக்கல் செய்த வழக்கு என்றால் சரி. அந்த வழக்கில் என்ன பரிகாரம் என்றால் தாத்தா சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்திருந்தேன். உண்மையில் நான் சொல்வது போல் முந்தைய வழக்கு பாக வழக்கு இல்லை என்றால் சரியல்ல. அந்த முந்தைய வழக்கானது பிரதிவாதி வீடு கட்ட ஆயத்த பணி செய்தபோது தாக்கல் செய்த வழக்கு என்றால் பிரதிவாதி எப்போது வீடு கட்டினார் என்றால் தெரியாது. பிரதி எப்போது வீடு கட்டி முடித்தார் என்றால் எனக்குத் தெரியாது.

பிரதி கட்டிடம் கட்டும்போதும் கட்டுமாணப் பொருட்கள் எதுவும் போடக்கூடாது என்றும் என்னுடைய வீட்டிற்கு சேதாரம் ஏற்படுத்தக் கூடாது என்று உருத்துக் கட்டளை பரிகாரம் கோரி பிரதி மீது முந்தைய வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரி. 7 ஆண்டுகளாக முந்தைய வழக்கை நடத்தி பிரதியை வீடு கட்ட விடாமல் அவருக்கு கஷ்ட, நஷ்டத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஏற்படுத்தியதாக சொல்லப்படும் ஆக்கிரமிப்புகளை ஆணையர் மூலம் அளந்து காண்பிக்க மன நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. 2 வது கிழமேல் பாதையில் நான் ஏற்படுத்திய ஆக்கிரமிப்புகள் தெரிய வந்துவிடும் என்பதற்காக அதனை மறைப்பதற்காகவும் நான் ஆணையர் மனு நடவடிக்கை

எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதியின் வயோதிகத்தை பயன்படுத்தி பிரதி வீட்டிற்க பின்புறம் உள்ள கிழமேல் பாதையை பயன்படுத்த விடாமல் கேட் அமைத்தும் பல கட்டுமானம் அமைத்தும் பல தடைகள் செய்து பிரதியின் பாதை அவகாசத்தை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சட்டப்படி அல்லாத ஆக்கிரமிப்புகளை மறைப்பதற்காகவும் அது சட்டப்படியான நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கவும் பிரதியின் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கிற்கு எந்தவித நியாயமும் தர்மமும் இல்லை என்றாலும் வழக்கு மூலம் எதுவும் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

நான் சொல்வதுபோல் பிரதி எந்த ஆக்கிரமிப்பும் வழக்குச் சொத்தில் செய்யவில்லை என்றாலும் வழக்கு பிரதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.